# <u>மாவட்ட நீதிமன்றம், நாகப்பட்டினம்</u>

## அசல் வழக்கு எண். 56/2022

## நாள்: 16-02-2024

பெயர் :சுசீலா

**PW1**

**<u>குறுக்கு விசாரணை</u>**

வழக்கில் உள்ள சொத்துகள் எனது மாமனாரும் எனது கணவரும் சேர்ந்து சம்பாதித்த சொத்துகள் ஆகும். வழக்குரையை படித்து பார்த்தேன் அதில் உள்ள விவரங்கள் எனக்கு நன்றாக தெரியும். வழக்குரையில் என் மாமனார் சொத்துகளை தேடியதாக மட்டுமே சொல்லப்பட்டுள்ளது எனவும் எனது கணவர் சொத்துகளை தேடவில்லை என்று சொல்லியுள்ளது என்றால் சரிதான். வழக்கு சொத்துக்கள் அனைத்தும் என் மாமனார் தான் சம்பாதித்தார் என்றும், எனது கணவர் சம்பாதித்தார் என்று வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. எனது கணவர் குழந்தையாக இருந்த போது வழக்கு சொத்துகளை மாமனார் வாங்கிவிட்டார் என்றால் சரிதான். இறந்த எனது மாமனார் உடைய வாரிசு என்ற முறையில் தான் வழக்கை தாக்கல் செய்துள்ளேன். இந்து கூட்டு குடும்ப சொத்து என்ற முறையில் பாக பிரிவினை கோரி வழக்கு தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். எனது கணவர் கடந்த 2004ம் ஆண்டு இறந்துவிட்டார் என்றால் சரிதான். எனது மாமனார் மற்றும் எனது கணவருக்கு பின்னர் மூன்றாம் பிரதிவாதியான எனது கணவரின் சகோதரர் ராஜேந்திரன் என்பவர் எங்கள் குடும்பத்தின் ஆண் வாரிசு என்றால் சரிதான். ராஜேந்திரன் மின்சார வாரியத்தில் நாளது தேதி வரை பொறியாளராக பணியாற்றி வருகிறார் என்றால் சரிதான். எனது கணவர் இறந்த பின்பு தான் 2 வது வாதியான எனது மகளுக்கு திருமணம் நடைபெற்றது என்றால் சரிதான். 2004ம் ஆண்டிலையே எனக்கு தனிபட்ட வருமானம் எதுவும் உள்ளதா என்றால் உள்ளது. அந்த தனிப்பட்ட வருமானத்தை கொண்டுதான் என்னுடைய மற்றும் எனது மகளைுடைய வாழ்வாதாரத்தை பார்த்து கொண்டோம் என்றால் பார்த்துகொண்டோம். எனக்கு தனிப்பட்ட வருமானம் உள்ளதை எனது வழக்குரையில் சொல்லியுள்ளேன். எனது தனிப்பட்ட வருமானத்தை வைத்து தான் எனது மகளை படிக்க வைத்ததாகவும் சொல்லியுள்ளேன். எனது மகள் படிப்பிற்கு எனது கணவர் தரப்பில் இருந்து எந்த உதவியும் செய்யபடவில்லை என்றால் சரிதான்.

ராஜேந்திரன் தான் எனது மகள் படிப்பிற்கு 30 ஆயிரம் ரூபாய் வருடத்திற்கு கட்டினார் என்றால் கட்டவில்லை. எனது மகள் படிப்பு கட்டணம் கட்டியதற்கான ரசீது ரஜேந்திரனிடம் உள்ளது என்றால் சரிதான். அந்த பணத்தை எனது தம்பி வெளிநாட்டில் இருந்து அனுப்பியதை ராஜேந்திரன் கட்டினார். எனது தம்பி வெளிநாட்டில் இருந்து பணம் அனுப்பிய விவரத்தை வழக்கில் சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன். மூன்றாம் பிரதிவாதிக்கு என் தம்பி பணம் அனுப்பிய விவரத்தை எனது தம்பியை விசாரணை செய்தால் தெரிந்துவிடும். எனது கணவர் அவரது வாழ்நாளில் சொந்த தொழில் தான் செய்து வந்தார் வேறு எந்த வேலையும் பார்க்கவில்லை என்றால் சரிதான். என் கணவர் செய்து வந்த தொழிலில் அவருக்கு நஷ்டம் வந்தது என்றால் சரிதான். அந்த தொழில் நஷ்டம் அடைந்தவுடன் வேறு தொழில் செய்தார். அந்த தொழில் செய்து வந்த போது அவர் இறந்துவிட்டார். எனது கணவர் முதலில் செய்த இறால் பண்ணை தொழிலில் ஏற்பட்ட நஷ்டத்தை எனது மாமனார்தான் சரி செய்தார். எனது கணவர் இறந்த உடன் 4 மாதங்களில் நான் வீட்டை விட்டு சென்றுவிட்டேன். எனது கணவர் இரண்டாவதாக செய்த தொழிலில் நஷ்டமே இல்லை, கடனும் எதுவும் இல்லை. எனது கணவருக்கு மூளையில் கட்டி ஏற்பட்டதால் அவரால் தொழிலை தொடர்ந்து செய்ய முடியவில்லை. அதன் காரணமாகதான் இரண்டாவது செய்த தொழிலும் நஷ்டம் ஏற்பட்டுவிட்டது என்றால் சரியல்ல. அவர் உயிருடன் இருந்த போதே தொழிலை நிறுத்திவிட்டார். நான் நாகப்பட்டினத்தில் வசித்த போது அருகில் வாசன் என்ற ஆசிரியர் வசித்து வந்தார் என்றால் சரிதான். அவர் என்னுடைய கணவரின் டீச்சர் என்ற முறையில் அவரிடம் தொழிலுக்காக பணம் கடன் வாங்கினார் என்றால் சரியல்ல. அவரிடம் கடனே வாங்கியது இல்லை. வாசன், பால்பாண்டி மற்றும் பலரிடம் பல இலட்சம் கடன் வாங்கியுள்ளார் அதனை 3ம் பிரதிவாதி ராஜேந்திரன் தான் தீர்த்தார் என்றால் சரியல்ல.